**ஜனவரி – 06**

# TNPSC துளிகள்

- தமிழக முதல்வர் சர் ஜான் மார்ஷல் சிலைக்கான அடிக்கல்லினை நாட்டியதுடன் சிந்து சமவெளி நாகரிக மாநாட்டினையும் தொடங்கி வைத்தார்.
- 1988 ஆம் ஆண்டில் இராஜீவ் காந்தி அரசினால் இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்ட சல்மான் ருஷ்டியின் சர்ச்சைக்குரிய புத்தகமான "The Satanic Verses" தற்போது டெல்லி புத்தகக் கடைகளில் கிடைக்கப் பெறுகிறது.
- ஜப்பானில் ஹோண்டா மோட்டார் மற்றும் நிசான் மோட்டார் ஆகிய மகிழுந்து நிறுவனங்களானது அவற்றின் சாத்தியமான இணைப்புக்கான ஒரு முழு அளவிலான பேச்சு வார்த்தையைத் தொடங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டு அஜந்தா-எல்லோரா சர்வதேச திரைப்பட விருது விழாவில் (AIFF) மூத்த திரைப்பட இயக்குனர்-எழுத்தாளர் சாய் பரஞ்ச்பே என்பவர் பத்மபானி வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற உள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## அரசாங்க இணையதளத்தில் அரசாணைகளை வெளியிடல் – தமிழ்நாடு




- பல அரசுத் துறைகள் ஆனது பல ஆண்டுகளாக அவற்றினால் பிறப்பிக்கப்பட்ட ஒரு அரசாணையை (G.O.) கூட பொது தளத்தில் வெளியிடவில்லை.
- சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் காடுகள், உள்துறை மற்றும் ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை (RD&PR) ஆகியவை அரசாணைகளை வெளியிடுவதில் வேறு பல துறைகளை விட மிகவும் முன்னிலையில் உள்ளன.
- தமிழ் மொழி மேம்பாடு மற்றும் செய்தித் துறையானது கடந்த 20 ஆண்டுகளாக எந்த அரசாணையையும் இணையதளத்தில் வெளியிடவில்லை.
- பொது (தேர்தல்) துறை ஆனது பல ஆண்டுகளாக ஒரு அரசாணையைக் கூட இன்னமும் வெளியிடாத மற்றொரு துறையாகும்.
- இந்தத் துறையானது கடைசியாக 2015 ஆம் ஆண்டு மே மாதத்தில் பொது தளத்தில் அரசாணையினை வெளியிட்டது.
- கைத்தறி, கைவினைப் பொருட்கள், ஜவுளி மற்றும் காதி துறை, அதன் பிரிவில் கடந்த சுமார் ஆறு ஆண்டுகளாக எந்தவொரு அரசாணையினையும் தன் தளத்தில் வெளியிட வில்லை.

- சிறந்த செயல்திறன் கொண்ட சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத் துறை ஆனது 2024 ஆம் ஆண்டில், அதன் பிரிவில் சுமார் 110 அரசாணைகளை வெளியிட்டு உள்ளது.
- உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை சுமார் 60 அரசாணைகளை வெளியிட்டு உள்ளது; RD&PR துறையானது 54 அரசாணைகளையும்; மற்றும் நீர்வளத்துறை சுமார் 30 அரசாணைகளையும் வெளியிட்டுள்ளது.

## கொடும்பாளூரில் அகழாய்வு




- புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தாலுக்காவில் உள்ள கொடும்பாளூரில் உள்ள குடியிருப்புகள் அமைந்துள்ள மேட்டுப் பகுதிகளில் இந்தியத் தொல்லியல் துறையின் திருச்சி வட்டப் பிரிவானது அகழாய்வு மேற்கொண்டுள்ளது.
- திருச்சியில் இருந்து சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ள கொடும்பாளூரில் இந்தியத் தொல்லியல் துறையினால் பரமரிக்கப்படும் பல நினைவுச் சின்னங்கள் உள்ளன.
- சுந்தர சோழன் (கி. பி. 956-973) என அழைக்கப் படும் இரண்டாம் பராந்தகனின் ஒரு அரசியல் கூட்டாளியாக இருந்ததாக நம்பப் படும் இருக்கவேல் தலைவரான பூதி விக்ரம கேசரி அவர்களால் கட்டப்பட்ட மூவர் கோயிலும் இதில் அடங்கும்.
- சங்க இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கொடும்பாளூர் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியத் தொல்லியல் துறையின் 2035 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள அகழ்வாராய்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கையின் (Looking Beyond) கீழ் திருச்சி வட்டத்தில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அடையாளம் கண்டுள்ள 32 தளங்களில் இதுவும் ஒன்றாகும்.

# தேசியச் செய்திகள்

## LEADS 2024

- ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது ஆறாவது LEADS (வெவ்வேறு மாநிலங்களில் தளவாட சேவைகளின் எளிமைத்தன்மை - 2024) என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குத் தேவையான தளவாட சேவைகளின் செயல்திறன் குறியீடாகும்.
- குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, ஒடிசா, தமிழ்நாடு மற்றும் டெல்லி ஆகிய 13

மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டு தளவாடக் குறியீட்டுப் பட்டியலில் "சாதனை படைத்தவை" பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- ஆந்திரப் பிரதேசம், கோவா, பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 16 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இந்தப் பட்டியலில் "வேகமாக முன்னேறி வருபவை" என்ற பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- "சாதனை படைத்தவை" என்ற பிரிவில் உள்ள மற்ற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சண்டிகர், ஹரியானா, தெலுங்கானா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியனவாகும்.
- கேரளா, மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் மற்றும் லடாக் ஆகியவை "முயற்சி செய்து வருபவை" பிரிவில் அடங்கும்.
- 2018 ஆம் ஆண்டு உலக வங்கியின் தளவாடச் செயல்திறன் குறியீட்டின் (LPI) மீதான அடிப்படையில் LEADS அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## Performance Rankings

- **Coastal States:**
  - *Achievers:* Gujarat, Karnataka, Maharashtra, Odisha, Tamil Nadu
  - *Fast Movers:* Andhra Pradesh, Goa
  - *Aspirers:* Kerala, West Bengal
- **Landlocked States:**
  - *Achievers:* Haryana, Telangana, Uttar Pradesh, Uttarakhand
  - *Fast Movers:* Bihar, Himachal Pradesh, Madhya Pradesh, Punjab, Rajasthan
  - *Aspirers:* Chhattisgarh, Jharkhand
- **North-Eastern States:**
  - *Achievers:* Assam, Arunachal Pradesh
  - *Fast Movers:* Meghalaya, Mizoram, Nagaland, Sikkim, Tripura
  - *Aspirers:* Manipur
- **Union Territories:**
  - *Achievers:* Chandigarh, Delhi
  - *Fast Movers:* Dadra and Nagar Haveli & Daman and Diu, Jammu and Kashmir, Lakshadweep, Puducherry
  - *Aspirers:* Andaman and Nicobar Islands, Ladakh

## இணையத்தில் காணப்படும் சட்டவிரோத உள்ளடக்கங்கள்




- மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் பல்வேறு மாநில அரசுகள், இணையத்தில்

காணப் படும் சட்டவிரோதமான உள்ளடக்கங்கள் குறித்து தகவல் தெரிவிப்பதற்கு இணையவெளிக் குற்றத் தகவல் தெரிவிப்புத் தன்னார்வலர்களாக சுமார் 54,800 நபர்களைப் பணியமர்த்தியுள்ளன.

❖ இணையவெளிக் குற்ற தகவல் தெரிவிப்பு தன்னார்வலர்கள் கட்டமைப்பு ஆனது, குடிமக்களுக்கு சட்டவிரோதமான உள்ளடக்கம் குறித்து புகாரளிப்பதற்கும், இணைய வெளித் தாக்குதல்களிலிருந்து சாதனங்களைப் பாதுகாத்தலுக்கான நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வினைப் பரப்புவதற்கும், சட்ட அமலாக்கத்திற்கு உதவும் இணைய வெளி நிபுணராகவும் அவர்களைப் பதிவுசெய்ய உதவுகிறது.

❖ 22,942 பேர் சட்டவிரோதமான உள்ளடக்கம் குறித்து புகாரளிப்பதற்காக, 22,071 விழிப்பு உணர்வு ஊக்குவிப்பாளர்கள் மற்றும் 9,819 நிபுணர்கள் உட்பட 54,833 இணையவெளிக் குற்ற தகவல் தெரிவிப்பு தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளதாக அறிக்கை கூறுகிறது.

❖ மாநிலங்கள் மற்றும் வங்கிகளில் உள்ள முதன்மைக் காவல் நிலையங்களுடன் இணைக்கப் பட்ட இணையவெளிக் குற்றப் புகார் வலைதளங்கள் ஆனது சராசரியாக, ஒவ்வொரு நாளும் 67,000 அழைப்புகளைப் பெறுகிறது, மேலும், தினசரியாக மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சுமார் 1,500-2,000 போலிக் கணக்குகளை இது வரை பாதுகாப்பு முகமைகள் அடையாளம் கண்டுள்ளன.

❖ 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையில், வாட்ஸ்அப் (43,797 புகார்கள்), டெலிகிராம் (22,680), இன்ஸ்டாகிராம் (19,800), பேஸ்புக் (20,766) மற்றும் யூடியூப் (3,882) போன்ற தளங்களில் குறைந்தது 1,10,925 இணையவெளிக் குற்றப் புகார்கள் அளிக்கப் பட்டுள்ளன.

## சிபிஐ அமைப்பிற்கான மாநில அரசின் ஒப்புதல் குறித்து உச்ச நீதிமன்றம்




❖ சம்பந்தப்பட்ட மாநில எல்லைக்குள் பணி புரியும் மத்திய அரசு ஊழியர் மீது மத்திய அரசு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய மத்தியப் புலனாய்வுத் துறைக்கு மாநில அரசின் அனுமதி தேவையில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

❖ இது ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் பிறவற்றை உள்ளடக்கியது.

❖ மத்தியப் புலனாய்வுத் துறையின் ஆய்வுக்கு விசாரணைக்கு பொது மற்றும் குறிப்பிட்ட வழக்கு சார்ந்த விசாரணை ஒப்புதல் என இரண்டு வகையான ஒப்புதல்கள் உள்ளன.

❖ ஒரு வழக்கை விசாரிப்பதற்காக ஒரு மாநில அரசு மத்தியப் புலனாய்வுத் துறைக்குப் பொது விசாரணை ஒப்புதலை (1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் துறை

ஸ்தாபனச் சட்டத்தின் 6வது பிரிவு) வழங்கும் போது, விசாரணை தொடர்பாக அல்லது ஒவ்வொரு வழக்கிற்கும் அந்த மாநிலத்திற்குள் நுழையும் ஒவ்வொரு முறையும் அந்தத் துறையானது புதிதாக அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

- அவ்வாறு அனுமதி வழங்கப் படவில்லையெனில், சம்பந்தப்பட்ட அம்மாநில அரசிடம் இருந்து விசாரணைக்காக வழக்கு வாரியாக மத்தியப் புலனாய்வுத் துறை ஒப்புதல் பெற வேண்டும்.
- குறிப்பிட்ட விசாரணை சார்ந்த ஒப்புதல் வழங்கப்படாவிட்டால், மத்தியப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு அந்த மாநிலத்திற்குள் அவர்கள் நுழையும் போது காவல்துறை அதிகாரிகளுக்கு இணையான அதிகாரம் வழங்கப்படாது.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவில் HMPV தொற்று




- சீன நாட்டில் மனித மெட்டாப்நியூமோவைரசினால் (HMPV) ஏற்பட்ட சுவாச நோய்ப் பாதிப்புகள் அதிகமாக பதிவாகி வருகிறது.
- இன்ஃப்ளுயன்ஸா A மற்றும் மைக்கோபிளாஸ்மா நிமோனியா ஆகியவற்றினால் சுவாசத் தொற்றுகள் ஏற்படுகின்றன.
- இது குறிப்பாக 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கிறது.
- 2001 ஆம் ஆண்டில் முதன்முதலில் அங்கு அடையாளம் காணப்பட்ட HMPV ஆனது நிமோவிரிடே வகை குடும்பத்தைச் சேர்ந்தது என்பதோடு இது ஒரு சுவாச ஒத்திசைவு வைரஸுடன் (RSV) நெருங்கிய தொடர்புடையது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் உமிழ்வு குறித்த தரவுத் தளம்

- இந்தியா சமீபத்தில் அதன் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் (GHG) குறித்த விவரங்கள் மற்றும் அதன் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய சமீபத்திய அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது.

- பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) கீழ், வளர்ந்து வரும் நாடுகள் பருவநிலை நடவடிக்கைக்கான தங்கள் முயற்சிகள் பற்றிய விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளன.
- 2005 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உமிழ்வின் செறிவு ஆனது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36% குறைந்துள்ளது.
- இந்தியாவின் மொத்த GHG உமிழ்வுகள் 2,959 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு ($CO_2$) சமமானதாக உள்ளது.
- வனவியல் துறை மற்றும் நில வளங்களின் கார்பன் பிடிப்பினைக் கணக்கிட்ட பிறகு, நாட்டின் நிகர உமிழ்வு ஆனது 2,437 மில்லியன் டன்கள் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு ($CO_2$) சமமானதாக இருந்தது.
- மொத்தத் தேசிய உமிழ்வுகள் (நிலப் பயன்பாடு, நிலப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் வனவியல் உட்பட) 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 7.93% குறைந்துள்ளது.
- அதேசமயம், 1994 ஆம் ஆண்டு முதல் இது 98.34% அதிகரித்துள்ளது.
- இந்த உமிழ்வுகளில் $CO_2$ மட்டும் 80.53 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது, அதைத் தொடர்ந்து மீத்தேன் (13.32%), நைட்ரஸ் ஆக்சைடு (5.13%) மற்றும் இதர மற்றவை 1.02% பங்கினைக் கொண்டுள்ளன.
- எரிசக்தி துறையில் இருந்து அதிகபட்சமாக 75.66% உமிழ்வுகள் பதிவாகியுள்ளது.
- உமிழ்வுகளில் வேளாண் துறை 13.72 சதவீதமும், தொழில்துறைச் செயலாக்கங்கள் மற்றும் தயாரிப்பு பயன்பாடு மற்றும் கழிவுத் துறை ஆகியவை முறையே 8.06% மற்றும் 2.56 சதவீதமும் பங்களித்துள்ளன.
- எரிசக்தி துறையின் உமிழ்வில் மின்சார உற்பத்தி மட்டும் 39% பங்கினைக் கொண்டு உள்ளது.




# மாநிலச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் யானைகள் எண்ணிக்கை - அசாம்

- 2024 ஆம் ஆண்டின் யானைகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பின் போது அசாமில் 5,828 யானைகள் இருப்பதாகப் பதிவாகியுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடந்த கணக்கெடுப்பில் பதிவான சுமார் 5,719 என்ற எண்ணிக்கையினை விட இது அதிகமாகும்.
- மொத்த எண்ணிக்கையில் 82% யானைகள் அல்லது 4,777 யானைகள் அம்மாநிலத்தில்

உள்ள ஐந்து யானைகள் வளங்காப்பகங்களில் உள்ளன.

- சிராங்-ரிபு யானைகள் வளங்காப்பகத்தில் அதிக எண்ணிக்கையிலான யானைகள் (அடர்த்தி) பதிவாகியுள்ளது.
- இங்கு யானைகளின் எண்ணிக்கையானது 2011 ஆம் ஆண்டில் 5,620 ஆகவும், 2008 ஆம் ஆண்டில் 5,281 ஆகவும், 2002 ஆம் ஆண்டில் 5,246 ஆகவும் இருந்தது.



e

## சத்தீஸ்கரின் பசுமை GDP முன்னெடுப்பு




- சத்தீஸ்கர் மாநில அரசானது இந்தியாவிலேயே முதன்முறையாக தனது காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளைப் பசுமை சார் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (பசுமை GDP) இணைக்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்கத்தின் பெரும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பங்களிப்புகளுக்கும் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இடையே உள்ள நேரடி தொடர்பை

எடுத்துக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- எதிர்கால சந்ததியினருக்கு வளமான சூழலை வளங்காத்து பொருளாதார மேம்பாடு எட்டப்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்தச் செயல் திட்டம் வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் 44 சதவீத நிலப் பரப்பில் காடுகள் பரவியுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக பிரெய்லி தினம் - ஜனவரி 04

- பார்வைத் திறனற்றவர்கள் மற்றும் பகுதியளவு பார்வைத் திறனற்றவர்களுக்கான தகவல் தொடர்பு சாதனமாக பிரெய்லி விளங்குவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ப்ரெயிலி என்ற முறையின் கருத்தாக்கத்தினை உருவாக்கிய பெரும் தொலைநோக்கு பார்வையாளரான லூயிஸ் பிரெயிலுக்கு கௌரவமளிக்கும் விதமாக இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1829 ஆம் ஆண்டில், பிரெய்லியில் எழுதப்பட்ட தனது முதலாவது புத்தகத்தினை அவர் வெளியிட்டார்.
- பிரெய்லி முறையானது இறுதியாக 1854 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் உள்ள ஒரு நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




# இதரச் செய்திகள்

## கோவிலில் மேல் ஆடையை அகற்றும் நடைமுறை

- கேரளாவின் சிவகிரி மடத்தின் தலைவர், பல்வேறு கோவில்களில் நுழையும் போது ஆண்கள் தங்கள் சட்டைகளை கழற்றுவதை "ஒரு தீய பழக்கம்" என்று கூறியுள்ளார்.
- சிவகிரி மடம் கேரளாவின் ஈழவ இந்து சமூகத்தின் ஒரு முக்கிய யாத்திரை தலமாகும்.
- இந்த மடம் ஆனது, 1904 ஆம் ஆண்டில் சமூகச் சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குரு

அவர்களால் நிறுவப்பட்டது.

- அவர் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடியதோடு, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் கோயில்களுக்குள் நுழையும் உரிமைக்காக போராடினார்.
- கேரளாவில், பல முக்கியக் கோவில்களில் இன்றும் கடவுள் பக்தர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடு விதிகள் உள்ளன.




## மாவட்ட அளவிலான பருவநிலை இடர் மதிப்பீடு




Figure 3.1: District-level Flood Hazard Map of India (for the period 1970–2019)

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், மண்டியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை

ஆய்வு மையம் (CSTEP) ஆனது, "இந்தியாவின் மாவட்ட அளவிலான பருவநிலை இடர் மதிப்பீடு: IPCC கட்டமைப்பைப் பயன்படுத்தி வெள்ளம் மற்றும் வறட்சி சார் இடர்களை வரைபடமாக்குதல்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- 51 மாவட்டங்கள் 'மிக அதிக அளவிலான வெள்ள அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும், மேலும் 118 மாவட்டங்கள் 'மிக அதிக வெள்ள அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும் அடங்கும்.
- இவை முதன்மையாக அசாம், பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், ஒடிசா மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ளன.
- 91 மாவட்டங்கள் 'மிக அதிக அளவிலான வறட்சி அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும், 188 மாவட்டங்கள் 'அதிக வறட்சி அபாயம் உள்ள பகுதிகள்' பிரிவிலும் அடங்கும்.
- இவை முதன்மையாக பீகார், அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அமைந்துள்ளன.
- 11 மாவட்டங்கள் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டு பிரிவிலும் 'மிக அதிக அளவிலான பாதிப்பு உள்ள பகுதிகள்' என்ற பிரிவிலும் உள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★